[17th January 1964

திரு. து. ப. அழகமுத்து : அரசாங்க அச்சகம், நூல் நிலையங்களில் உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை தரவேண்டுமென்று மதிப்பீட்டுக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. அதை அமுலாக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் பார்க்கக்கூடிய வேலை இருந்து, அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளுவதாக இருந்தால் வேலை கொடுக்கப்படும். குறிப்பிட்ட வேலைக்கு அவர்கள் தகுதி உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : 1962-63-ல் இப்படி வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் ? அவர்களில் எத்தனை பேருக்கு என்ன வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

* 10 கேள்வி.—**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குருடர் முதலான உறுப்பிழந்தோருக்கு வாழ்வு தரும் வகையில் மாநில அரசு 1962-ல் செலவழித்த தொகை என்ன ?

(இ) மத்திய அரசிடமிருந்து இதற்காக உதவி ஏதேனும் கிடைத்ததா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A sum of Rs. 3,31,848 was spent on the education of the handicapped during 1962–63 and a sum of Rs. 7,951·65 on the Special Employment Office for the Physically Handicapped.

(*b*) No financial aid was received from the Government of India towards expenditure on the education of the handicapped. The entire expenditure incurred on the Special Employment Office was, however, reimbursed by the Government of India.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : உறுப்பிழந்தோர் பலர் தெருவிலே பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது வேறு விஷயம். அதற்குத் தனியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கொதிகலன் தொழிற்சாலை (திருச்சிராப்பள்ளி)

* 13 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி உயர்அழுத்தக் கொதிகலன் திட்டத்தின் ஆரம்ப வேலைகளைச் செய்யும் பணியை நமது மாநில அரசாங்கத்திடம் மத்திய அரசாங்கம் ஒப்படைத்துள்ளதா ?

(இ) ஆரம்ப வேலைகளுக்கு நமது மாநில சர்க்கார் இதுவரை எவ்வளவு தொகை எவை எவற்றிற்காகச் செலவிட்டிருக்கிறார்கள் ?

17th January 1964]

(உ) மேற்படி திட்டத்திற்காக வேலைக்கு ஆட்கள் தேர்ந்தெடுக்க இன்டர்வியூ கார்டுகள் அனுப்பும்பொழுதும், தேர்வு நடத்தும்பொழுதும் மாநில சர்க்காரின் பிரதிநிதி யாரேனும் கலந்தாலோசிக்கப்படுகின்றனரா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) **High Pressure Boiler** தொழிற்சாலைக்குத் தேவையான நிலத்தை சம தரையாக்கும் வேலை மட்டும் இவ்வரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1963-ம் வருடம் அக்டோபர் மாதம் முடிய இதற்காகச் செலவழித்த தொகை ரூ. 20.40 லட்சம். செலவு தொகை பூராவும் மத்திய சர்க்காரிடமிருந்து வசூலிக்கப்படும்.

(உ) தொழிற்சாலைக்குத் தேவையான ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் இந்த ராஜ்ய தொழில் வர்த்தக இயக்குநரும் ஒரு அங்கத்தினர்.

திரு. து. ப. அழகமுத்து : வெளியில் உள்ள குறிப்பிட்ட ஒரு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுந்தான் அந்தத் தொழிற்சாலையில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாகப் புகார் கூறப்படுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரிப் புகார் எங்களுக்கு வந்தது. நான் அந்த நிர்வாக அதிகாரியை அழைத்துப் பேசினேன். அவர்கள், 'பாய்லர் பிளாண்ட் ரெக்ரூட்மெண்ட் லிஸ்ட்' பூராவையும் கொண்டு வந்தார்கள். அதைப் பார்த்ததில் ஒரு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் சலுகை காட்டப்படுகிறது என்ற குற்றச்சாட்டு சரியல்ல என்பதை நானே உணர்ந்தேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : குற்றச்சாட்டு ஒரு மாகாணத்தில் உள்ளவர்களுக்குத் தனிச் சலுகை கொடுக்கப்படுகிறது என்பதல்ல. குறிப்பாக திருச்சி மாவட்டத்தில், தமிழ் நாட்டில் இருப்பவர்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை என்பதுதான் குற்றச் சாட்டு. அது உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முற்றும் உண்மையல்ல. அரசியல் சாசனப்படி ஒரு குறிப்பிட்ட மாகாணத்திலோ, மாவட்டத்திலோ இருப்பவர்களுக்குத்தான் சலுகை காட்ட வேண்டுமென்று சொல்லுவது சரியல்ல. அவ்வாறு சொன்னால் நஷ்டப்படுகிறவர்கள் தமிழ் நாட்டில் இருப்பவர்களாகத்தான் இருப்பார்கள்.

திருமதி டி. என். அனந்தநாயகி : அந்தத் தொழிற்சாலை திருச்சி மாவட்டத்தில் இருப்பதால் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்காவது ஒரு தனிச் சலுகை அந்தத் தொழிலில் கொடுக்க முடியுமா என்று ஆராய்வது சரி என்று நான் நினைக்கிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ? 3-0(pm

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவ்வாறு செய்ய உத்தேசம் இல்லை. அவ்வாறு செய்யக் கூடாது என்பதுதான் சர்க்காரின் எண்ணம்.

[17th January 1964

திரு. அ. பெ. தர்மலிங்கம் : *அந்தச் சுற்று வட்டாரத்தில் இருப்பவர்களுக்கு வேலையே கிடைப்பதில்லை. அங்கு தகுதியானவர்கள் இருந்தும் வேறு மாநிலங்களில் இருந்து எடுக்க வேண்டியது அவசியமா ?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தமிழ் நாட்டில் இருப்பவர்கள் எல்லோருக்கும் இதில் வேலை வாய்ப்பு கிடைக்க உரிமை இருக்கிறது. இந்த மாநிலத்தில் உள்ளவர்களுக்குத்தான் தனிச் சலுகை கொடுக்க வேண்டுமென்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. பொதுவாக இந்தப் பகுதி மக்களுக்குத் தான் அதிகமான அளவில் வேலை வாய்ப்பு கிடைக்க முடியும். ஏனெனில் பீஹார், காஷ்மீர் போன்ற இடங்களில் இருந்து இங்கு சாதாரண வேலைக்கு வரமாட்டார்கள். வர முடியாது. கெசட்டட் உத்தியோகங்களுக்கு எடுக்கும்போது அகில இந்திய ரீதியில் செலக்ஷன் நடக்கிறது. தகுதி உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : *அந்த ப்ளாண்ட் திறப்பு விழாவிற்கு வந்திருந்த அமைச்சர் அவர்கள் இந்த மாவட்டத்தைச் சார்ந்த, சுற்றுவட்டாரத்தில் உள்ளவர்களுக்குத்தான் முதல் சலுகை அளிக்கப்படுமென்று பேசியது அரசாங்கத்திற்குத் தெரிய வருமா ?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது எனக்குத் தெரியாது. அந்தமாதிரி பேசியிருந்தால் அது இந்திய அரசியல் கொள்கைக்கு சற்று மாறானது என நினைக்கிறேன்.

திரு. ஆர். ரங்கசாமி : *திருவிதாங்கூர் சர்க்காரில், அங்கு ஆரம்பிக்கக் கூடிய புதிய தொழில்களில் 100-க்கு இவ்வளவு என்று அங்குள்ளவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று ஒரு உத்தரவு இருப்பதாகக் கூறுகிறார்கள். அதேபோல் இங்கும் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விவரம் எனக்குத் தெரியாது. அப்படி இருக்க முடியாது என்பதுதான் என் எண்ணம்.

திரு. அ. தியாகராஜன் : *வரண்ட பிரதேசமாக இருப்பதும், வேலை வாய்ப்பு அதிகம் கிடைக்காமல் இருக்கும் புதுக்கோட்டைப் பகுதியில் இருப்பவர்களுக்கு திருச்சி பாய்லர் தொழிற்சாலையில் இந்த வேலை வாய்ப்பை அளிக்க அரசாங்கம் முன்வருமா ?*

(பதில் இல்லை.)

New building for the Secretariat

* 14 *Q.*—SRI K. CHEEMAICHAMY : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government propose to construct a new building for Secretariat Offices?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.